## தீவிரவாதத்துக்கு எதிரான போரில்

# தமிழ்நாடு இந்திய இராணுவத்துடன் நிற்கிறது!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, மே 8-

"தீவிரவாதத்துக்கு எதிரான போரில் தமிழ்நாடு இந்திய இராணுவத்துடன் நிற்கிறது'' என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

**தீவிரவாதத்துக்கு எதிரான போரில் தமிழ்நாடு இந்திய இராணுவத்துடன் நிற்கிறது.**

**நமது இராணுவத்தினருடன், நமது நாட்டுக்காக, தமிழ்நாடு உறுதியாக நிற்கிறது.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.5.2025) திடீர் மறைவெய்திய மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி J. சத்ய நாராயண பிரசாத் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன், மாண்பமை உயர் நீதிமன்ற நீதிபதி ஆர். சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ. ரவீந்திரன் ஆகியோர் உள்ளனர்.

## மே 7– 2021 அன்று 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று ஒலித்த அந்தக் குரல்

# இன்று தமிழ்நாட்டின் ஒவ்வொரு வீட்டிலும் ஒலித்துக்கொண்டு இருக்கிறது!

## சென்னையில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை,மே.8-**

**திராவிட மாடல் அரசு, 4 ஆண்டுகளை நிறைவு செய்து, 5-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி, முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சென்னையில் நடைபெற்றது.**

**இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி னார். அப்போது அவர் `4 ஆண்டு திராவிட மாடல் அரசின் சாதனைகள் பல்லாண்டுகள் தொடர அயராது உழைப்போம். நம் முதலமைச்சர் அவர்களின் கரங்களை வலுப்படுத்துவோம்' என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

இந்த சிறப்புக்குரிய நிகழ்ச்சியில் உங்களுக்கு எல்லாம் வரவேற்பு அளிப்பது மிகுந்த மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருக்கிறது.

இந்த நான்கு ஆண்டுகளில் அடுத்த நாற்பது ஆண்டுகளுக்கு தமிழ்நாட்டிற்குச் செய்ய வேண்டிய பணிகளை நம் முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள்.

இளைஞர்கள், மாணவர்கள், மகளிர், விளையாட்டு வீரர்கள், விவசாயிகள், மாற்றுத்திறனாளிகள் என்று பார்த்துப் பார்த்து ஒவ்வொரு பிரிவிற்கும் என்னென்ன தேவையோ அவற்றையெல்லாம் நம் முதலமைச்சர் அவர்கள் செய்து இருக்கிறார்கள்.

### அன்று ஒலித்த அந்தக் குரல்

இதே நாள் மே 7-ஆம் தேதி 2021-ஆம் ஆண்டு அன்று `முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று, அன்று ஒலித்த அந்தக் குரல் இன்றைக்கு தமிழ்நாட்டின் ஒவ்வொரு வீட்டிலும் ஒலித்துக்கொண்டு இருக்கிறது.

நமது திராவிட மாடல் அரசு இரண்டு ஆண்டுகள் நிறைவு செய்தபோது, நம் அரசின் திட்டங்களால் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் பயன்பெற்று வந்தது. இன்றைக்கு நான்கு ஆண்டுகளை நிறைவு செய்கின்ற நேரத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள, ஒவ்வொரு தனிமனிதரும் நமது அரசால் பயன்பெற்று இருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

அதனால்தான் இன்றைக்கு நம் தமிழ்நாட்டின் திட்டங்களை, நம் முதலமைச்சர் கொடுத்து வருகின்ற திட்டங்களை ஒட்டுமொத்த இந்தியாவே பின்பற்றுகிறது. இது வெறும் திராவிட மாடல் அல்ல, இது சாதனை மாடல் என்பதை நாம் நிரூபித்து காட்டி இருக்கிறோம்.

### விடியல் பயணம் திட்டம்

2021-ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் நம் முதலமைச்சர் அவர்கள் போட்ட முதல் கையெழுத்தே மகளிருக்கான கட்டணமில்லாப் பேருந்துத் திட்டத்தை உறுதி செய்கின்ற விடியல் பயணம் திட்டம்.

அதற்கடுத்து, அரசுப் பள்ளியில் படித்து உயர் கல்வியில் சேர்கின்ற மாணவிகளுக்குப் புதுமைப்பெண் திட்டம், மாணவர்களுக்குத் தமிழ்புதல்வன் திட்டம், தாய்மார்கள் காலையில் எழுந்து குழந்தைகளுக்குக் காலை உணவு சமைத்து கொடுப்பது அவ்வளவு சாதாரண விஷயம் கிடையாது. எனவே, அந்தப் பணியை எளிதாக்கிட, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை கொடுத்தார் நம் முதலமைச்சர் அவர்கள்.

இது எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு திட்டம். ஒட்டுமொத்த இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்த ஒரு திட்டம். அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம். இன்றைக்கு ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 15 லட்சம் மகளிர் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெற்று வருகிறார்கள்.



ஜூன் மாதம் முதல் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தின் கீழ் புதிதாகவும் விண்ணப்பங்கள் ஏற்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருந்தார்கள்.

### வாழ்வை மாற்றிய திட்டங்கள்

மாணவர்களின் உயர்கல்வி, வேலை வாய்ப்பிற்குத் துணை நிற்க, `நான் முதல்வன் திட்டம்`, `தமிழ்நாடு வேளாண் பட்ஜெட்', `உங்கள் தொகுதியில் முதலமைச்சர்', `இல்லம் தேடி கல்வி', `மக்களைத் தேடி மருத்துவம்', `இன்னுயிர் காப்போம்', `நம்மை காக்கும் 48', `முதல்வர் மருந்தகம்' போன்ற திட்டங்கள் மக்களின் வாழ்வை மாற்றி இருக்கின்றன.

இவற்றையெல்லாம்விட மிகமிக சிறந்த ஒரு திட்டம், எனக்கு பெருமையோடு சொல்லக்கூடிய திட்டம் என்னவென்றால் உடலுறுப்பு தானம் செய்வோருக்கு அரசு மரியாதையுடன் இறுதி சடங்கு நடத்தப்படும் என்ற புரட்சி திட்டத்தை நம் முதமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

அதற்குப் பிறகு, இந்தியாவிலேயே அதிக அளவில் உடலுறுப்பு தானம் செய்யும் மாநிலமாக நம் தமிழ்நாடு இன்றைக்கு உயர்ந்து நிற்கிறது. தந்தை பெரியார் பிறந்த நாளை `சமூக நீதி நாள்', அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளை `சமத்துவ நாள்' என்று அறிவித்தார் நம் முதலமைச்சர் அவர்கள்.

### 100-க்கும் அதிகமான வீரர்கள்

உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகள் நியமன முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர் என்று அறிவித்தார். மற்ற துறைகளுக்கு இணையாக விளையாட்டுத்துறையும் தமிழ்நாடு இன்றைக்கு இந்தியாவில் நம்பர் ஒன் இடத்தை நோக்கி சென்றுகொண்டு இருக்கிறது. ஏராளமான சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளும், மாநில அளவிலான போட்டிகளும் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டுள்ளன. விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் கீழ் 100-க்கும் அதிகமான வீரர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கி தந்து இருக்கிறோம். இந்த ஆண்டு 25 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கும் வேலைவாய்ப்பைப் பெற்று தருவோம் என்ற உறுதியை எடுத்து இருக்கிறோம்.

### 9.69 சதவிகிதம் வளர்ச்சி

5 ஆண்டுகளுக்கு முன்பு வீழ்ச்சியில் இருந்த தமிழ்நாட்டின வளர்ச்சி சதவிகிதம் நம் முதலமைச்சரின் திட்டங்களால் இன்றைக்கு 9.69 சதவிகிதத்துடன், இந்தியாவிலேயே முதலிடத்தை அடைந்து இருக்கிறது. இந்த சாதனைகளோடு நம் திராவிட மாடல் அரசு இன்று ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

இந்த இனிய விழாவிற்கு தலைமையேற்க வந்து இருக்கக்கூடிய நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வருக, வருக என வரவேற்கிறேன். வந்திருக்கின்ற அனைத்து மூத்த அமைச்சர்களையும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களையும், மாண்புமிகு மேயர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளையும் வருக, வருக என வரவேற்கிறேன். அரசுத் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அனைத்து அரசு அதிகாரிகளையும் வருக, வருக என வரவேற்கிறேன். நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ள காவல்துறை அதிகாரிகளையும், நலத்திட்டங்களை பெற வந்துள்ள அனைத்து பயனாளிகளையும், மாணவச் செல்வங்களையும், கழகத்தின் நிர்வாகிகளையும், பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

நம் திராவிட மாடல் அரசின் சாதனைப் பயணம் இந்த ஐந்தாண்டுகள் மட்டுமல்ல, அடுத்து வர இருக்கின்ற பல ஆண்டுகளுக்கு நிச்சயம் தொடரும். அதற்கு அமைச்சர்கள், அதிகாரிகள் அனைவரும் நம் முதலமைச்சர் அவர்களுக்குப் பக்கபலமாக இருந்து செயலாற்றுவோம் என்று கூறி, மீண்டும் உங்கள் அனைவரையும் வருக, வருக என வரவேற்று அமர்கிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.


**தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்**

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு**

| ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | பணியின் விவரம் |
|---|---|---|
| 23 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 2 | Supply of Multiple Port outlet for XRP 1043 Bowl Mill |
| 27 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 2 | Supply of Expansion Joint between Eco outlet to APH inlet damper |
| 22 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி | Hydraulic boom luffing system valves and pumps for ECHS Reclaimers |
| 26 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி | SBV Poppet valve for Water Wall Soot Blowers of Model WB1E for boilers of unit - II |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in**

செ.ம.தொ.இ/1970/ஒப்பந்தப்புள்ளி/2025


## திருவள்ளூரில் – நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களின் 3 குடும்பங்களுக்கு

# முதலமைச்சர் பொது நிவாரணத் தொகை தலா ரூ.3 லட்சத்திற்கான காசோலை!

## அமைச்சர் சா.மு.நாசர் வழங்கினார்!



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் செங்குன்றம் சார்ந்த வெங்கட்ராமன், காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர், சார்ந்த ஹரிஹரன், விருதுநகர் மாவட்டம், திருத்தங்கல் சார்ந்த ராஜா(எ) வீரராகவன் ஆகிய இளைஞர்கள் திருவள்ளூர் நகரத்தில் உள்ள ஸ்ரீ வீரராகவர் பெருமாள் கோவில் குளத்தில் குளிக்கச் சென்றபோது நீரில் மூழ்கி உயிரிழந்ததையொட்டி அவர்களது குடும்பத்தினரிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொது நிவாரணத் தொகை தலா ரூ.3 இலட்சத்திற்கான காசோலையினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் குடும்பத்தினருக்கு வழங்கி ஆறுதல் கூறினார். அருகில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இராஜ்குமார் ஆகியோர் உள்ளனர்.

*திருவள்ளூர் மே 08;*

*திருவள்ளூர் மாவட்டம், எண்.15/2, பாத்திமா தெரு, காமராஜர் நகர், செங்குன்றம் சார்ந்த செல்வன்.வெங்கட்ராமன் த/பெ சுதர்சன் என்பவர், காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர், எண்19, ஆதவன் தெரு உதயம் நகரை சார்ந்த செல்வன்.ஹரிஹரன் த/பெ மணிவண்ணன் , விருதுநகர் மாவட்டம், எண்300, ஜெமினி காம்பவுண்டு, குறுக்குபாதை அருகில், திருத்தங்கல் சார்ந்த செல்வன்.ராஜா(எ) வீரராகவன் த/பெ ரவி 06.05.2025 அன்று திருவள்ளூரில் உள்ள ஸ்ரீ வீரராகவர் பெருமாள் கோவில் குளத்தில் குளிக்கச் சென்றபோது நீரில் மூழ்கி உயிரிழந்தார்கள். அதனைத் தொடர்ந்து உயிரிழந்த அவர்களின் தந்தை சுதர்சனம், மணிவண்ணன், ரவி ஆகியோரிடம் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கான தலா ரூ. 3 இலட்சத்திற்கான காசோலையினை*

*சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் அவர்கள் வழங்கி குடும்பத்தினர்களுக்கு ஆறுதல் கூறினார்*

*அப்போது பாதிக்கப்பட்ட குடும்பத்தினர்கள் தெரிவிக்கையில் இது போன்ற நேரத்தில் எங்களுக்கு உறுதுணையாக இருந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாட்டு அரசுக்கும் திருவள்ளூர் மாவட்ட நிர்வாகத்திற்கும் மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம் என தெரிவித்தார்கள்*

*இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் திருத்தணி எஸ்.சந்திரன், வி.ஜி.இராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜ்குமார் தனித்துணை ஆட்சியர் பாலமுருகன், திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் ரவிச்சந்திரன், இந்து சமய அறநிலைத் துறை உதவி ஆணையர் சிவஞானம் , மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வெங்கட்ராமன், மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் சங்கிலி ரதி, திமுக சிறுபான்மையினர் நல அணி மாநில இணை செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்டத் துணைச் செயலாளர்கள் எம்.எல்.ரவி, மு.கதிரவன், முன்னாள் நகர மன்ற தலைவர் பொன் பாண்டியன், ஒன்றிய செயலாளர்கள் எஸ்.மகாலிங்கம், மோ.ரமேஷ், ப.ச.கமலேஷ், பொதுக்குழு உறுப்பினர் சிட்டிபாபு, ம.கிரண், டி. மோதிலால், பாபு கமலநாதன், தியாகராஜன், சரஸ்வதி சந்திரசேகர், பிரபாகரன், முரளிகிருஷ்ணன், மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.*

## தமிழ்நாடு அரசின் சார்பில் காவல்துறை அணிவகுப்புடன் இறுதி மரியாதை!

# நீதிபதி ஜெ.சத்ய நாராயண பிரசாத் மறைவு - நீதித்துறைக்கு பேரிழப்பாகும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மே 8 -

மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி J. சத்ய நாராயண பிரசாத் அவர்களின் மறைவையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி J. சத்ய நாராயண பிரசாத் அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு பேரதிர்ச்சிக்குள்ளானேன்.

அவரைஇழந்து வாடும் அவரது குடும்பத்தி னருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றிய தனது தந்தையின் வழியில் சட்டத்துறையை தேர்வு செய்து, வழக்கறிஞராகி, அரசியல் சட்டம் உள்ளிட்ட அனைத்துத் தரப்பான வழக்குகளிலும் திறம்பட வாதிடும் திறமை படைத்தவர்.

வழக்கறிஞராக நீண்ட அனுபவத்துடன் 2021இல் சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாகப் பொறுப்பேற்று சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர். நீதித்துறையில் மேலும் தனது சிறந்த பங்களிப்பை, சாதனைகளைப் படைக்க வேண்டிய தருணத்தில் நிகழ்ந்துவிட்ட அவரது எதிர்பாராத மறைவு நீதித்துறைக்கும் நீதி பரிபாலன முறைக்கும் பேரிழப்பாகும்.

தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாருக்குக் காவல்துறை அணிவகுப்புடன் கூடிய இறுதி மரியாதை செலுத்தப்படும். பணியில் இருக்கும் நீதிபதி ஒருவரை இழந்து வருந்தும் சக நீதியரசர்கள், வழக்கறிஞர்கள், நீதிமன்ற ஊழியர்கள் அனைவருக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆட்சியின் 5வது ஆண்டை முன்னிட்டு திருவள்ளூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு இடங்களில் உள்ள 5 ஏழை எளிய பள்ளி மாணவ – மாணவிகளுக்கு கல்வி உதவி தொகை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் டாக்டர் வி.சி.ஆர்.குமரன் வழங்கினார்.